அரசுப் பணிகளில் ஒப்பந்த பணியாளர் முறை!

இளைஞர்களுக்கு த.வெ.க. அரசு செய்யும் மிகப் பெரிய துரோகம்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, நவ.4-

அரசுப் பணிகளில் ஒப்பந்த பணியாளர் முறை அமல்படுத்துவது என்பது இளைஞர்களுக்கு த.வெ.க. அரசு செயயும் மிகப் பெரிய துரோகமாகும் என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் கண்டித்துள்ளது.

இது குறித்து 3.11.2026 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு அரசு பணிகளில் ஒப்பந்த பணியாளர் முறையை தீவிரமாக அமல்படுத்தும் வகையில் தவெக அரசு, அரசாணையை வெளியிட்டுள்ளது. அதில், ``தமிழ்நாடு அரசின் அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை (Overseas Manpower Corporation Limited OMCL) அரசு துறைகள், பொதுத் துறை நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி ஆட்களை அவுட்சோர்சிங் (Outsourcing) முறையில் வழங்கும் முகமையாக நியமிக்கிறது'' என்று கூறியிருக்கிறது. இதனால் அரசின் ஒரே அலுவலகத்தில் ஒரே வேலை செய்யும் ஒருவர் நிரந்தர பணியாளர். மற்றொருவர் ஒப்பந்த பணியாளர். ஒருவருக்கு உரிய ஊதியமும் பணி பாதுகாப்பும் உண்டு. மற்றொருவருக்கு நிலையற்ற பணியும் எதிர்காலம் குறித்த அச்சமும் இருந்து கொண்டே இருக்கும். அரசாங்கம் என்பது நிரந்தர வேலைவாய்ப்பு கொடுக்கும் அமைப்பாக இருக்க வேண்டும். நிரந்தர வேலைவாய்ப்புகளை ஒப்பந்த பணியாளர்களாக மாற்றி இளைஞர்களின் எதிர்காலத்தை நிலையற்றதாக மாற்றி விடக்கூடாது. தமிழக இளைஞர்கள், கேட்பது தங்களது கல்விக்கும் உழைப்புக்கும் தகுதியான நிரந்தர வேலைவாய்ப்பாகும். இது அவர்களின் உரிமை சார்ந்த எதிர்பார்ப்பாகும்.



தினகரன்

நவம்பர் 3, 2026 செவ்வாய்க்கிழமை

இளைஞர்களுக்கு அரசு துரோகம்

தமிழ்நாடு அரசு பணிகளில் ஒப்பந்த பணியாளர் முறையை தீவிரமாக அமல்படுத்தும் வகையில் தவெக அரசு, அரசாணையை வெளியிட்டுள்ளது. அதில், "தமிழ்நாடு அரசின் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தை (Overseas Manpower Corporation Limited - OMCL) அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணி ஆட்களை அவுட்சோர்சிங் (Outsourcing) முறையில் வழங்கும் முகமையாக நியமிக்கிறது' என்று கூறியிருக்கிறது. இதனால் அரசின் ஒரே அலுவலகத்தில் ஒரே வேலை செய்யும் ஒருவர் நிரந்தர பணியாளர். மற்றொருவர் ஒப்பந்த பணியாளர். ஒருவருக்கு உரிய ஊதியமும் பணி பாதுகாப்பும் உண்டு. மற்றொருவருக்கு நிலையற்ற பணியும் எதிர்காலம் குறித்த அச்சமும் இருந்து கொண்டே இருக்கும். அரசாங்கம் என்பது நிரந்தர வேலைவாய்ப்பு கொடுக்கும் அமைப்பாக இருக்க வேண்டும். நிரந்தர வேலைவாய்ப்புகளை ஒப்பந்த வேலைவாய்ப்புகளாக மாற்றி இளைஞர்களின் எதிர்காலத்தை நிலையற்றதாக மாற்றி விடக்கூடாது. தமிழக இளைஞர்கள், கேட்பது தங்களது கல்விக்கும் உழைப்புக்கும் தகுதியான நிரந்தர வேலைவாய்ப்பாகும். இது அவர்களின் உரிமை சார்ந்த எதிர்பார்ப்பாகும்.

தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவது ஏன்? என எதிர்க்கட்சிகள் மற்றும் பல்வேறு சங்கங்கள் கேள்விகளை எழுப்பி வருகின்றன. அரசு பணிகளையே வெளிமுகமை வழியாக நிரப்பமுற்படுவது, அரசுப்பணிக்காக இரவுபகல் பாராமல் படித்து, அயராது முயலும் லட்சக்கணக்கான இளைஞர்களின் எதிர்காலத்தை இருளாக்கும் செயலாகும்.

தவெக அரசு ஆட்சிக்கு வந்தது இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கா அல்லது இருக்கின்ற வேலைவாய்ப்புகளைக்கூட நிரந்தரமற்றதாக மாற்றுவதற்கா? அரசுப்பணிகள் அனைத்தையும் தனியார் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க தாரை வார்த்துவிட்டு, அரசு போட்டித்தேர்வு வயது வரம்பை உயர்த்துவதால் யாருக்கு என்ன பயன்? அரசு பணிகளை வெளிமுகமை மூலம் நியமித்தால் அரசுப்பணியாளர் தேர்வாணையம் என்ற ஒன்று எதற்கு? கலைத்துவிடலாமே?.

எல்லாவற்றையும் தனியாரிடம் ஒப்படைத்தால் அரசு எதற்கு? ஆட்சி நிர்வாகம்தான் எதற்கு? தமிழக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் அரசுக்கு என்ன தயக்கம்? அரசுப்பணிகளை வெளிமுகமைகளிடம் ஒப்படைப்பதால் பயன்பெறப்போவது வேலைக்காக காத்திருக்கும் இளைஞர்களா அல்லது பணியாளர் வழங்கும் நிறுவனங்களா என சரமாரி பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கான பணியாளர்களை தற்காலிக ஒப்பந்த முறையில் நியமிக்கும் நடவடிக்கையை தமிழ்நாடு அரசு கைவிடுவதோடு, காலியாக உள்ள பணியிடங்களை அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்து, பல லட்சக்கணக்கான தமிழக இளைஞர்களின் அரசுப்பணி வாய்ப்பையும், சமூகநீதி இட ஒதுக்கீட்டையும், தொழிலாளர்களின் உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இளைஞர்களுக்கு 5 லட்சம் புதிய அரசு வேலை வாய்ப்புகள், 5 லட்சம் இளைஞர்களுக்கு உள்ளாட்சி அளவில் வேலை வாய்ப்புகள் என்று தவெக தேர்தல் வாக்குறுதி கொடுத்து விட்டு, இப்போது, ஒப்பந்த வேலை வாய்ப்புகளை உருவாக்குவதாக கூறுவது அவர்களுக்கு செய்யும் மிகப்பெரிய துரோகமாகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர அவைத் தலைவர் சு.அதியமான் தலைமை! நகரச் செயலாளர் கி.கணேசன் வரவேற்பு!

அம்பை இடைத்தேர்தலில் கடுமையாக உழைத்து வெற்றிக்குப் பாடுபட வேண்டும்!

கூட்டத்தில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் பேச்சு!

நெல்லை, நவ.4-

நெல்லை மேற்கு மாவட்டம் விக்கிரமசிங்க புரம் நகர தி.மு.க சார்பில் நடை பெறயிருக்கும் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் சம்பந்தமாக பொது உறுப்பினர்கள் கூட்டம் (02-11-2026) அன்று விக்கிரமசிங்கபுரம் மெயின் ரோடு குருபாலா திருமண மண்டபத்தில் நகர அவைத்தலைவர் சு.அதியமான் தலைமையில் நகர இளைஞரணி அமைப்பாளர் செல்வ சுரேஷ் பெருமாள், நகர பொருளாளர் பெ.இரவி, மாவட்ட பிரதிநிதிகள் இசக்கி பாண்டியன், சு.பிரபாகரன்,நகர துணை செயலாளர் கள் ஐயப்பன்,செல்வகுமாரி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நகர செயலாளர் கி.கணேசன் வரவேற் புரை யாற்றினார்

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப் பாளர் இரா.ஆவுடையப் பன் பங்கேற்று விரைவில் நடைபெறயிருக் கும் அம் பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் குறித்து கழக நிர்வாகி களுக்கு ஆலோசனைகள் வழங்கி பேசியதாவது .

அம்பாசமுத்திரம் சட்ட மன்ற தொகுதிக்கு இடைத் தேர்தல் எதற்காக வருகிறது என்று இங்கு கருத்து கூறிய வர்கள் அருமையாக எடுத் துரைத்தார்கள். இடைத் தேர்தல் எதற்கு வர வேண்டுமோ, அதற்கு மாறாக வந்துள்ளது.அதற்கு காரணம் இந்தத் தொகுதி யில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இசக்கி சுப்பையா, தேர்தல் முடிந்து 20 நாளில் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு மீண்டும் வந்து இசக்கி சுப்பையா உங்களிடம் ஆதரவு கேட்டுவருவது நாம் அனைவரையும் அவர் ஏமாளிகள் என்று நினைக்கிறார்.சில ஊர்களில் அவரை பொதுமக்கள் விரட்டியதாக பத்திரிக்கை மற்றும் ஊடகங்களில் பார்த்தோம்.

நடைபெற்ற சட்டமன்



றத் தேர்தலில் அம்பாசமுத் திரம்,ஆலங்குளம் தொகுதி களில் நாம் கடுமையாக உழைத்து வெற்றிக்கு பாடு பட்டோம்.

ஆலங்குளம் தொகுதி யில் வெற்றி பெற்றோம். இங்கு காங்கிரஸ் வேட்பாளர் 6000 வாக்கில் தோல்வியடைந்தார்.நாம் தான் அவருக்காக உழைத்தோம். கூட்டணி கட்சிகள் ஒத்துழைப்பு கொடுக்கவில்லை.

அதில் சிலகட்சிகள் இன்று நம்மிடமும் இல்லை. தற்போது இந்த த.வெ.க.ஆட்சி அறிவித்த என்ன திட்டங்களை செய்துள்ளது.நம் கழகத் தளபதியார் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களை பெயர் களை மாற்றி செயல்படுத்தி வருகிறார்கள்.அம்பாசமுத்திரம் தொகுதியில் வெள்ள பாதிப்பு இல்லாத போதிலும் ரூபாய் 6000 ம் கொடுத்தது நம் தளபதிஅவர்கள், கோடைகாலத்தில் ரூபாய் 5000,ம் கொடுத்தும் நம் தளபதி அவர்கள் தான்.தி.மு.க.மாதிரி ஆட்சியில் சாதனை செய்த கட்சியும் கிடையாது, ஆட்சியும் கிடையாது.தற்போது நாம் மாற்றத்தால் ஏமாந்து தான் இருக்கிறோம்.

கழக ஆட்சியின் போது திட்டங்கள் என்றால் அது தலைவர் கலைஞர் அவர்களும்,திராவிட மாடல் நாயகர் அன்புத் தளபதியார் அவர்களும் தான்.

இங்கு பெண்கள் அதிகமாக வந்திருக்கிறீர்கள் கழக அரசின் திட்டங்கள் அனைத்துமே பெண்களுக்காக தான்.அந்தத் திட்டங்களை நீங்கள் அனுபவித்து உள்ளீர்கள்.பலனடைந்தும் உள்ளீர்கள்.

இந்த இடைத்தேர்தலில் நீயா,நானா என்ற உணர் வோடு செயல்பட வேண்டும். நடந்து முடிந்த தேர்தலில் இசக்கி சுப்பையா பணம் கொடுத்து ஓட்டு வாங்கியதாக தேர்தல் கமிஷன் அவர் மீது வழக்கு போட்டுள்ளது.அவர் நிற்க முடியாது என்று கூட அறிவிப்பு வரலாம்.

தேர்தல் கமிஷன் போட்ட வழக்கில். ஆகவே கழக தலைவர் அவர்கள் அறிவிக்கும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய நாம் உழைக்க வேண்டும். மீண்டும் அம்பாசமுத்திரம் தொகுதி கழகத்தின் கையில் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ. பிரபாகரன், மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மாஞ்சோலை மைக்கேல், தமயந்தி,ஒன்றிய செயலாளர்கள் பரணி சேகர், ஜெகன், முத்துக் கிருஷ்ணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தவசு பாண்டியன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஜெ.செல்வ சூடாமணி (வழக்கறிஞரணி) பிரேம் ஆனந்த் (தகவல் தொழில் நுட்ப அணி. சு.க.நெடுஞ் செழியன் (கலைஇலக்கிய பகுத்தறிவு பேரவை) நெல்லை மணி (இலக்கிய அணி) திலகா சிற்றரசன் (நகர்மன்ற துணை தலைவர்) பிரகாஷ் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி) அருண் மாவட்ட விவசாய தொழிலாளரணி துணை அமைப்பாளர் ஆறுமுகம் உள்பட அணி துணை அமைப்பாளர்கள் வார்டு செயலாளர்கள்,நகர்மன்ற உறுப்பினர் கள்,நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள்,நகர தகவல் தொழில்நுட்ப அணியினர், நகர மாணவரணியினர்,மகளிரணியினர்

வார்டு கழக பிரதிநிதிகள், கழக முன்னணியினர் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 13 வது வார்டு செயலாளர் ராஜேந்திரன் நன்றியுரை ஆற்றினார்.



திராவிட முன்னேற்றக் கழக மாணவர் அணி மண்டல ஆலோசனை கூட்டம் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நேற்று மாநில செயலாளர் வீரமணி ஜெயகுமார் தலைமையில் நடைபெற்றது. சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட மாணவர் மன்ற உறுப்பினர் படிவங்களை மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு முன்னிலையில் மாநில செயலாளர் வீரமணி ஜெயகுமார் அவர்களிடம் வழங்கினார். உடன் மாணவர் அணி மாநில துணை செயலாளர் ராமகிருஷ்ணன், மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் உடனிருந்தனர்.



வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு மண்டலம் 4 வட்டம் 38 எண்ணூர் நெடுஞ்சாலை, வைத்தியநாதன் மேம்பாலம், நேதாஜி நகர், தமிழன் நகர், நெடுஞ்செழியன் நகர், கலைஞர் கருணாநிதி நகர், ஆகிய பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரி உடன் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் எம்.சி, நேரில் சென்று ஆய்வு செய்து மழைநீர் தடை இல்லாமல் செல்வதற்கு உண்டான பணி மேற்கொள்ளப்பட்டது. உடன் கோட்ட பொறியாளர் ஸ்ரீதர், கழகத் தோழர்கள் மாநகராட்சி ஊழியர்கள் சீனிவாசன், கோகுல், உடனிருந்தனர்.

ஆயிரம் விளக்கு கிழக்கு 117 (அ) வட்ட

பகுதிப் பிரதிநிதி கவியரசு மனைவி க.சர்மிளா தேவி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை,நவ.4-

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி 117வது (அ) வட்ட பகுதி பிரதிநிதி உதயநிதி (எ) கவியரசு அவர்களின் மனைவி ஷர்மிளா தேவி அவர்கள் 02.11.26 இரவு 7.00 மணி அளவில் இயற்கை எய்தினார்.



அன்னாரின் உடலுக்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பகுதி கழக செயலாளர்கள் மா.பா அன்புதுரை, கே.ஏழுமலை எம்.சி., திருமலை பொன்னுரங்கம் எம்.சி., வட்டச் செயலாளர் தேனா எல். தவமணி மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (04.11.26) மதியம் 12 மணி அளவில் நெ.25. சாரங்கபாணி தெரு, ஜி. ஆர்.டி. டேங்க், தி.நகர் சென்னை 17. அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(2.11.2026)



1. மதுரை மாவட்டம், சமயநல்லூர் அருகே முன்விரோதம் காரணமாக பிரபல ரவுடி முகத்தை சிதைத்து கொடூர கொலை....

2. புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே மது வாங்கித் தர மறுத்ததால் கார் டிரைவர் கத்தியால் சராமாரியாக குத்தி படுகொலை ....

3. பெரம்பலூர் மாவட்டம், வெண்பாவூரில் சிறுமியிடம் செல்போனில் பேசியது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் கல்லூரி மாணவர் குத்தி கொலை ...

4. திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் தனியார் விடுதியில் தங்கிய குடும்பத்தினரை கத்தியை காட்டி மிரட்டி நகைகளை கொள்ளையடித்த முன்னாள் போலீஸ்காரர் சிக்கினார்....

5. சென்னை, தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்ற தனியார் நிறுவன ஊழியரை வழிமறித்து கத்தியை காட்டி பணம் பறித்த மூன்று பேர் சிக்கினர் ...



6. சென்னை, பெரம்பூரில் தனியார் நிறுவன ஊழியர் வீட்டு பூட்டை உடைத்து பணம் மற்றும் வைர வளையல்கள் திருட்டு...

7. நெல்லை மாவட்டம், பாளையங்கோட்டை அருகே அடுத்தடுத்த மூன்று வீடுகளில் பூட்டை உடைத்து 41பவுன் நகை மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொள்ளை ...

8. திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றம் அருகே அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் வீட்டு பூட்டை உடைத்து 55 பவுன் நகை கொள்ளை ...

9. உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடி அருகே அரசு செவிலியரின் முகத்தை துணியால் மூடி 18 சவரன் தாலி செயின் பறிப்பு ....



10. சென்னை அடுத்த துரைப்பாக்கத்தில் தனியார் மாணவர் விடுதியில் பூட்டை உடைத்து மூன்று லேப்டாப்கள் திருட்டு ....

11. தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய ரூ. 1,614 கோடி கொரிய முதலீடு ஆந்திராவிற்கு சென்றது. முதலீடுகளை தக்கவைக்கத் தவறிய த.வெ.க. அரசு, 1500 பேருக்கு வேலைவாய்ப்பு பறிபோனது ....

12. ராணிப்பேட்டை அருகே அரசால் தடை செய்யப்பட்ட. 226 கிலோ குட்கா புகையிலை பொருட்கள் சிக்கியது ....

தமிழ்நாட்டு ரேசன் கடைகளில் விநியோகிப்பதற்காக கொள்முதல் செய்யப்பட்ட

450 டன் வெங்காயம் எங்கே போனது? மர்மம் நீடிப்பு?

அழுகி துர்நாற்றம் வீசுகிறது என பொதுமக்கள் புகார்!

சென்னை, நவ.4-

அண்டை மாநிலங்களில் இருந்து தரமற்ற வெங்காயத்தை கொள்முதல் செய்து ரேஷன் கடைகளில் த.வெ.க. அரசு விற்று வருகிறது. இதனை பொதுமக்கள் வாங்காமல் புறக்கணித்து வருகின்றனர். இதனால் மகாராஷ்டிராவிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு கொண்டு வரப்பட்ட 450 டன் தரமற்ற வெங்காயம், சென்னை தண்டையார்பேட்டையில் சரக்கு ரயிலிலேயே மூட்டை, மூட்டையாக குவித்து வைக்கப் பட்டுள்ளதாக தகவல் வெளியானது. இந்த வெங்காயங்கள் அனைத்தும் அழுகி துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதிவாசிகள் புகார் தெரிவித்தனர்.

இந்நிலையில், வெங்காயத்தை திருப்பி அனுப்பி விட்டதாக தமிழக அரசு அதிகாரிகள் கூறிய நிலையில், வெங்காயம், திருப்பி அனுப்பப்பட வில்லை என்றும், தமிழக அரசு அதிகாரிகள் எடுத்துச் சென்று விட்டதாகவும் ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் 450 டன் வெங்காயம் எங்கே போனது என்பதில் மர்மம் நீடித்து வருகிறது. இதற்கிடையே, த.வெ.க. அரசின் அலட்சியத்தால் கொருக்குப்பேட்டை கூட்ஸ் செட்டில் 250 டன் வெங்காயம் அழுகி துர்நாற்றம் வீசுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

10 லாரிகளில் ஏற்றப்பட்ட வெங்காயத்தை எடுத்துச் செல்ல முடியாமல் ஓட்டுநர்கள் தவிப்பதாக கூறப்படுகிறது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; புதுக்கோட்டையிலே, விஜய்யை சந்திக்க வந்த கூட்டணிக் கட்சி வேட்பாளர், காங்கிரஸ் உள்ளூர் தலைவர் இவங்களை எல்லாம் சந்திக்க விடாம ஒரு ரூம்ல மூணு மணிநேரம் அடைச்சி வெச்சிட்டாங்களாம். என்ன அநியாயம்?

பட்டணம் : **ஆமாமய்யா; அநியாயம் தான். கூட்டணிக் கட்சி வேட்பாளர், சொரணை உள்ளவரா இருப்பார் போலத் தெரிகிறது. உடனே வேதனையோடு கண்டன அறிக்கை வெளியிட்டுட்டார். இதுவரை காங்கிரஸ் சார்பில் அறிக்கையே காணோம். என்ன பண்றது, எல்லாம் பதவி படுத்தும் பாடு.**